# முக்கிய சாராம்சம்

*கொழும்பில் கட்டாயப்படுத்திய வெளியேற்றம்: உயர் அடுக்குமனை வாழ்க்கை* என்பது இலங்கையின் தலைநகரில் கட்டாயப்படுத்திய வெளியேற்றம் மீது மாற்றுக் கொள்கை களுக்கான நிலையத்தின் (மா.கொ.நி) இரண்டாவது அறிக்கையாகும். இந்த அறிக்கை, முன்னைய பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் நடைபெற்ற வெளியேற்றுதல்களைப் பிரதானமாக நோக்குகுின்றதுடன், இதன் போது அமைச்சின் அழகுபடுத்தல் நிகழ்ச்சிநிரலின் ஒரு பகுதியாக நகரப் புத்தமைப்பு செயல்திட்டத்தின் (URP) மூலமாக 2020 அளவில் கொழும்பை ஒரு சேரிகளற்ற நகராக உருவாக்குவதை அமைச்சு இலக்காகக் கொண்டிருந்தது.

கொழும்பிலுள்ள குறைந்த வருமானம் கொண்ட குடியிருப்பாளர்களின் வெளியேற்றுதல் களானது யுத்தம் முடிவடைவதற்கு முன்னதாகவும் மற்றும் நகரப் புத்தமைப்புச் செயல்திட்டத்திற்கு அதிகம் முன்னதாகவுமே ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. நகர அபிவிருத்தி அதிகாரசபை, பாதுகாப்பு அமைச்சின் கீழும் மற்றும் இலங்கையின் அபிவிருத்தி மற்றும் அழகுபடுத்தலின் பிரதான வடிவமைப்பாளரான அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபாய ராஜபக்சவின் கீழ் கொண்டு வரப்பட்ட பின் அது வேகமும் அதிகாரமும் பெறப் பெற்றது. நகரப் புத்தமைப்பு செயல்திட்டத்தின் கீழ் வரும் சமூகங்களை தெமட்டகொடவில் மீள்குடியமர்த்தும் அவசரம், மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதை முதன்மைப் படுத்துவதை மனதில் கொள்ளாது, ஆனால் உயர்ந்த வர்த்தகப் பெறுமதியுடனான அந்த சொத்துக்களை விடுவிக்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டது. இந்த நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு பிரயோகிக்கப்பட்ட வழிமுறைகள் இந்த செயல்திட்டத்தை கூடுதல் பிரச்சினையுடையதாக்கின. இராணுவப் பலம், மிரட்டுதல் மற்றும் தொல்லைப்படுத்தல் என்பன மக்களை அவர்களது வீடுகளை விட்டு வெளியேற்றுவதற்கு பிரயோகிக்கப்பட்டன என்பதுடன் இச்செயன்முறையானது காணி கையகப்படுத்தல் தொடர்பான இலங்கையின் சட்டங்களைப் பின்பற்றவில்லை.

இந்தச் சமூகங்கள் தெமட்டகொட மற்றும் வனாத்தமுல்ல ஆகிய பகுதிகளில் உயர் அடுக்கு மனைக் கட்டிடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டு இன்று அவர்கள் பல துன்பங்களுக்கு முகங் கொடுக்கின்றனர். அந்த அடுக்குமனைகள் மக்களுக்கு இலவசமாக அளிக்கப்பட்டன என்ற பொதுவான நம்பிக்கைக்கு முரணாக, தங்கள் குடியிருப்புகளிலிருந்து வெளியேற்றப்பட்ட இந்த

மக்கள், முதல் 3 மாதங்களுக்குள் 1 இலட்சத்திற்கும் அதிகமான ஒரு தொகை உட்பட, அடுத்த 20 வருடங்களுக்கும் ஒரு பத்து இலட்சத்திற்கும் (1 மில்லியன்) அதிகமான தொகையை அரசிற்கு செலுத்துதல் வேண்டும். இது, தங்களது முந்திய வதிவிடங்களுக்கு ஆட்கள் உறுதிகளைக் கொண்டுள்ளார்களோ இல்லையோ என்பதுடன் தொடர்பற்றதாக இருந்தது. அவர்களது குடிமனைகளுக்கான உறுதிகள் இன்னமும் கொடுக்கப்படவுள்ளதுடன் அவற்றை விற்பது, வாடகைக்கு விடுவது மற்றும் ஈடு வைப்பதில் கட்டுப்பாடுகள் உள்ளன. இது நிதி ரீதியான பாதுகாப்புக்கான ஒரு மூலம் அவர்களிடமிருந்து அகற்றப்பட்டுள்ளதைக் கருதுகிறது. நகர அபிவிருத்தி அதிகாரசபையின் படி, இந்தக் குடிமனைகள் ஒவ்வொன்றினதும் கிரயம் 70 இலட்சம் (7 மில்லியன்) ரூபாய்களாகும். நகர அபிவிருத்தி அதிகாரசபை அளித்த கணக்குளே, இந்தக் கிரயங்கள் உண்மையிலேயே, மிகவும் குறைவானவை என்பதைத் தெரிவிப்பதினால், இந்தக் கிரயக் கணிப்பீடானது மிகவும் சந்தேகத்திற்குரியதாகும்.

அநேகமான ஆட்களால் முகங் கொடுக்கப்பட்ட ஒரு கடுமையான பிரச்சினை போதிய இடமின்மையாகும். ஒவ்வொரு குடிமனையும் சுமார் 400 சதுர அடிகளாகும், இந்த மனைகளுக்கு மீள்குடியமர்ந்தோர்கள் இதனை விட இரண்டு மடங்கு பெரியதானதும் மற்றும் ஒரு குடும்பத்திற்கும் கூடுதலான இடவசதியைக் கொண்ட வீடுகளை முன்னர் கொண்டிருந்தனர். இன்று சில குடிமனைகளில் 14 வரையான அல்லது கூடுதலான ஆட்கள் உள்ளனர், 'வீட்டிற்கு ஒரு குடிமனை' என்ற கொள்கை போதிய இடமின்மை காரணமாக, சில குடும்பங்கள் வேறு எங்காவது, வாடகைக்கு வசிப்பதற்கு கட்டாயப்படுத்தப்பட்டுள்ளன என்பதைக் கருதுகிறது. இந்தப் பிரச்சினை தங்களது வீடுகளை அடிப்படையாகக் கொண்டு வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களையும் பாதித்தது. வாழ் வாதாரங்களிலிருந்து பிள்ளைகளின் பாடசாலை வரை மற்றும் கட்டிடங்களின் மோசமான பராமரிப்பு மற்றும் மோசமான கட்டுமானத் தரம் என வேறு பல தீவிரமான பிரச்சினைகளும் அங்கு எஞ்சியிருந்தன.

உயர் அடுக்குமனைகளில் வாழ்பவர்களால் முகங் கொடுக்கப்படும் பிரச்சினைகளுக்கு அப்பால், இந்த அறிக்கையில் பல கரிசனைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. மே 2010 இல் அவர்களது வீடுகளிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட மியூ வீதி, ஸ்லேவ் ஐலன்ட் என்பவற்றின் முன்னாள் குடியிருப்பாளர்களைப் போன்ற சமூகங்களுடனான கலந்துரை யாடல்களின் போது மா.கொ.நி இன் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட ஒரு முக்கியமான பிரச்சினை அவர்களது வாக்களிக்கும் உரிமை இல்லாமற் போனமையாகும். இந்தக்

குடியிருப்பாளர்களுக்கு, நிரந்தரமான வீட்டுவசதி இன்னமும் கொடுக்கப்படவுள்ளதுடன், இன்னமும் வாடகைக்கு குடியிருப்பதால், அவர்கள் புதிய இடத்தில் பதிவு செய்து கொள்ள முடியாதுள்ளமை, வாக்களிப்பதற்கான அவர்களது அடிப்படை உரிமை மீறப்படுவதை ஏற்படுத்தியுள்ளது. வெள்ளவத்தை, மயூரா பிளேஸ் இடத்திலும் சம்பவங்கள் உள்ளன, மயூரா பிளேஸில் குடிமனைக் கட்டிடம் திறக்கப்பட்டு 7 மாதங்களுக்கு மேலாகிய பின்னரும், 17 குடும்பங்கள் வாக்குறுதி அளிக்கப்பட்டவாறு இன்னமும் வீட்டுவசதிகளைப் பெறுவதற்காக உள்ளனர்.

சமூகங்கள் இந்தப் பிரச்சினைகளை புதிய நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட குழுவுக்கு எழுத்து மூலமாக விளக்கியுள்ளன. மார்ச் 2015 இல் நியமிக்கப்பட்ட இந்தக் குழு, முன்னைய ஆட்சியின் கீழ் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நடவடிக்கைகளை பரிசீலித்து "இந்த மீள்குடியமர்த்தல் மற்றும் புனர்வாழ்வுச் செயன்முறைகளில் ஏற்படுத்தப்பட்ட அநீதிகளைப் புலன்விசாரணை செய்வதற்கும், மற்றும் பொருத்தமான பரிந்துரைகளை மேற்கொள்வதற்கும் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடுகளைத் துரிதப்படுத்துவதையும்" நோக்காகக் கொண்டதாகும்.

புதிய அரசாங்கம் மற்றும் நகர அபிவிருத்திக்கான புதிய அமைச்சரின் முன்னாலுள்ள பணிகள் உண்மையிலேயே சவால் மிக்கதொன்று என்பதுடன் உடனடியாகக் கவனம் செலுத்தப்பட வேண்டியதாகவும் உள்ளது. ஒரு முழுமையான மீள்பரிசீலனை மேற்கொள்ளப் படும் வரை நகரப் புத்தமைப்பு செயல்திட்டத்தின் கீழான அனைத்துச் செயல்திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டு, இது வரையான ஒரு கணக்காய்தலை அறிந்து கொள்வது அவசியமாகும். துரதிர்ஷ்டவசமாக, இது இன்னமும் மேற்கொள்ளப்பட வேண்டியதை காணவேண்டியுள்ளதுடன், பதிலுக்கு நகரப் புத்தமைப்பு செயல்திட்ட நடவடிக்கைகள் தொடர்வதை மட்டுமே நாம் காண்கிறோம்.

கொழும்பு அபிவிருத்தி முன்னெடுப்பில் உலக வங்கியின் வகிபாகமும் கூட இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எங்களது முன்னைய அறிக்கையில், நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் வெளியேற்றல்கள் மேற்கொள்ளப்படுகையில் அது தொடர்பில் உலக வங்கியின் மௌனம் குறித்து நாங்கள் குறிப்பிட்டதுடன், கொழும்பு பெருநகர அபிவிருத்திச் செயல்திட்டத்தில் உலக வங்கி நகர அபிவிருத்தி அதிகாரசபையுளுடன் நெருக்கமாகப் பணியாற்றுகின்றது. கொழும்பிலுள்ள ஆயிரக் கணக்கான குடியிருப்பாளர்களுக்கு

மறுக்கப்பட்ட அனைத்துப் பாதுகாப்புகளும் வங்கியினால் நிதியளிக்கப்பட்ட செயல்திட்டத்தின் கீழ் வந்த குடும்பங்களுக்கு அளிக்கப்பட்டன. எவ்வாறாயினும், வங்கியின் செயல்திட்டத்தின் கீழ் குடியமர்த்தப்பட்ட குடும்பங்கள் கூட இராணுவத்தால் தொல்லைப்படுத்தப்பட்டும் மற்றும் அச்சுறுத்தப்பட்டும் மற்றும் அவர்களது வீடுகளிலிருந்து பலவந்தமாகவும் வெளியேற்றப் பட்டனர். முன்னைய ஆட்சியின் கீழ், நகர அபிவிருத்தி அதிகாரசபை போன்ற இராணுவக் கட்டுப்பாட்டு நிறுவனங்கள் போன்றவற்றின் செயற்றிறனைக் கட்டியெழுப்புதல் மற்றும் நிதியளித்தல் மூலமாக இராணுவமயப்படுத்தலுக்கு வங்கி ஆதரவளித்தது. தன்னார்வத்துடன் இல்லாத மீள்குடியேற்றங்கள் எந்தளவிற்கு சிறந்த முறையில் கையாளப்பட முடியுமென வங்கியினால் நிதியளிக்கப்பட்ட செயல்திட்டங்கள் வெளிக்காட்டுகின்றன என வங்கி தெரிவித்த போதிலும், அவர்களது செயல்திட்டங்களால் பாதிக்கப்படும் மக்களைப் பாதுகாக்கும் கொள்கைகளை உண்மையானவைகளாக நிலைநாட்டுவதற்கு உலக வங்கி தவறியமை தெளிவாகின்றது.

இந்த அறிக்கை பூரணமான அல்லது முழுமையானதிலிருந்து விலகியிருந்தாலும், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நகரப் புத்தமைப்பு நிகழ்ச்சி நிரலின் ஊகங்களுக்கு எதிரான யதார்த்தங்களின் ஒரு கண்ணோட்டத்தை தருவதை இலக்காகக் கொள்கிறது. உடனடியான பரிகாரத்துக்கும், அதே போன்று நீண்ட காலத் தீர்வுகளையும் மற்றும் காணிகளின் வர்த்தகப் பெறுமதியை அல்லாமல் மக்களை மனதில் கொண்டு வடிவமைக்கப்பட்ட கொள்கைகளுக்கு, ஒரு அவசரமான தேவையுள்ளது. இந்த அறிக்கையில் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள், அனைவரும் வாழத்தக்க நகரமாக கொழும்பை ஆக்குவதை கவனத்தில் கொள்வதற்கும் மற்றும் முன்னெடுக்கப்படவும் வேண்டிய நீண்ட கால நடைமுறைகளுக்கு மேலதிகமாக, அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உடனடியான நடைமுறைகளையும் சுட்டிக்காட்டுகிறது.